DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF ASSISTANT SESSIONS JUDGE,CHEYYAR

CASE NO. SC. No. 203/2019

Prosecution witness PW - 12

| | | |
|---|---|---|
| Name | …. | E. Alex |
| Father's Name | .... | Elango |
| Village | .... | |
| Taluk | .... | |
| Caste | .... | |
| Calling | .... | Sub Inspector |
| Religion | .... | |
| Age | …. | |

Solemnly affirmed in accordance with the Provisions of Act X of 1873 of 18th day of August 2025.

(எதிரிகள் ஆஜர்)

**முதல் விசாரணை**

நான் தற்போது கள்ளக்குறிச்சி மாவட்டத்தில் உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். நான் அனக்காவூர் காவல் நிலையத்தில் 2018 ஆம் ஆண்டு உதவி ஆய்வாளராக பணியில் இருந்தபோது 14.06.2018 அன்று காவல் நிலையத்தில் இருந்த ராஜசேகர் என்பவர் சிகாமணி என்பவரிடம் புகாரை பெற்று அதற்காக CSR பதிவு செய்ப்பட்டுள்ளது. 14.06.2018 CSR No.115/2018 பதிவு செய்யப்பட்டது. அதன்பிறகு முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தது 15.06.2018. குற்ற எண்.363/2018, பிரிவுகள் 147, 148, 294(பி), 323,

324, 307 இதச r/w 4 of Women Harrasement Act பதிவு செய்து சம்பவ இடத்திற்கு பகல் 12.00 மணிக்கு சென்று சம்பவ இடத்தை பார்வையிட்டு சாட்சிகள் ராஜமாணிக்கம் மற்றும் சுப்பிரமணி ஆகியோர்கள் முன்னிலையில் பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்யப்பட்டது. அந்த பார்வை மகசர் அ.த.சா.ஆ.10 மற்றும் மாதிரி வரைபடம் அ.த.சா.ஆ.11 ஆக குறியீடு செய்யப்படுகிறது. பின் எதிரிகளை மாலை 17.30 மணிக்கு அனப்பத்தூர் கூட்ரோடு அருகே கைது செய்து எதிரிகள் தயாளன், மகேஷ் அவர்களை கைது செய்து எதிரி தயாளன் தானாக முன்வந்து எந்தவித அச்சுறுத்தல் இன்றி கொடுத்த ஒப்புதல்வாக்குமூலத்தை சாட்சி பன்னீர்செல்வம், வேல்முருகன் முன்னிலையில் பதிவு செய்து 17.45 மணிக்கு எதிரி தயாளன் என்பவரிடம் இருந்து அவர் சண்டைக்கு அவர் பயன்படுத்திய இரும்பு ஆன், ஆப் ராடு கைப்பற்றப்பட்டது. அந்த கைப்பற்றுதல் மகசர் அ.த.சா.ஆ.12, அதனை படிவம் 95 மூலம் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டது. அது அ.த.சா.ஆ.13 ஆகும். அதன்பிறகு எதிரிகளை நீதிமன்ற காவலுக்கு தகுந்த வழிகாவலுடன் அனுப்பிவைக்கப்பட்டது. மேற்கொண்டு மேல்விசாரணைக்காக ஆய்வாளரிடம் 16.06.2018 அன்று பகல் 12.00 மணிக்கு ஒப்படைத்தேன். அதேபோல நான் பதிவு செய்த முதல் தகவல் அறிக்கை அ.த.சா.ஆ.14.

**குறுக்கு விசாரணை**

இல்லை